**தலைப்பு 123 – நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு.**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தலைப்பு 123 – நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 யூன் 25 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| கடந்த ஆண்டிற்குரிய அறிக்கையுடனான தொடர்பு | அமுல்படுத்தப்படாதிருந்த பரிந்துரைகள் | இந்த அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|
| 2.1(அ) | நிதிப்பிரமாணம் 50(ii) இன் பிரகாரம் மதிப்பீடு இயலுமான வரை முழுமையாகவும் சரியாகவும் தயாரிக்கப்படல் வேண்டும். | 2.1(அ) |
| 2.1(ஈ) | -மேற்படி- | 2.1(அ) |

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) மீண்டெழும் செலவினம் மற்றும் மூலதன செலவினம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் காணப்பட்ட தோட்ட வீட்டுப் பிரிவு 2023 சனவரி 19 ஆம் திகதிய இலக்கம் 2315/35 என்ற அதிவிசேட வர்த்தமாணியின் மூலம் நீர்வழங்கல் மற்றம் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு (166) ஆக தனியான அமைச்சாக நியமிக்கப்பட்டிருந்தது. எனினும் இந்தப் புதிய அமைச்சின் | 2023 ஆம் ஆண்டில் பாதீட்டு நிதியேற்பாட்டின் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் அதிவிசேட வர்த்தமானியின் பிரகாரம் இந்த அமைச்சின் கீழ் காணப்பட்ட தோட்ட வீடமைப்பு விடயப்பரப்பு நீர்வழங்கல் அமைச்சிற்கு மாற்றப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தோட்ட உட்கட்டமைப்பு விடயப்பரப்பிற்குரிய பாதீட்டு நிதியேற்பாடு நிதிப்பிரமாணம் | கணக்குகள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| மூலதன மற்றும் மீண்டெழும் செலவினமாக ரூபா 1,092.9 மில்லியன் இந்த அமைச்சின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதனால் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செலவினமாக ரூபா 1,092.9 மில்லியனால் மிகைக் கணிப்பீட்டிற்கு உட்பட்டிருந்தது. | 208 இன் கீழ் நீர்வழங்கல் அமைச்சுக்கு மாற்றுமாறு பொதுத் திறைசேரியின் பாதீட்டுத் திணைக்களத்தால் ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அந்த செலவினம் இந்த அமைச்சின் செலவினத் தலைப்பின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | |

**(ஆ) ஆதனங்கள் , பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு யாழ்ப்பாண நகர மண்டபத்தை நிர்மாணிக்கும் மொத்த கிரயம் ரூபா 1,636.15 மில்லியன் ஆக இருந்த போதிலும் நிதியல்லாச் சொத்துக்களின் அறிக்கையில் தொகுதி இலக்கம் 9160 இன் கீழ் யாழ்ப்பாண நகர மண்டபத்தின் நிர்மாண செயற்திட்டத்தின் கிரயம் ரூபா 1,382.61 மில்லியன் ஆக காண்பிக்கப்பட்டமையால் நிதியல்லாச் சொத்துக்களின் பெறுமதி ரூபா 253.54 மில்லியன் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | நிதி அமைச்சுடன் கலந்துரையாடி அந்த வேறுபாட்டுக்குரிய சொத்துக்களை கணக்கீடு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | கணக்குகள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |

**(இ) வாடகை மற்றும் வேலை முற்பணம், வாடகை மற்றும் வேலை முற்பண ஒதுக்கக் கணக்கு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 05 ஒப்பந்தகாரர்களுக்கு செலுத்தப்பட்ட ரூபா 254.18 மில்லியன் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. வாடகை மற்றும் வேலை முற்பணக் கணக்கிற்கும் வாடகை மற்றும் வேலை முற்பண ஒதுக்கக் கணக்கிற்கும் மேற்கொள்ள வேண்டிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்படாமையின் காரணமாக அந்த கணக்குகள் மீதி குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | வேலை ஆரம்பித்தல் முற்பணம், வாடகை மற்றும் வேலை முற்பண கணக்குகளுக்கு சீராக்குவதற்கு ஆலோசனை கிடைத்திருக்காமையினால் கணக்கீடு செய்யப்படவில்லை. | கணக்குகள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |

(ஈ) கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 356.66 மில்லியன் பொறுப்புக்களை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. அப்பெறுமதி ஒட்டுமொத்த பொறுப்புக்களின் பெறுமதியில் 25 சதவீதம் ஆகும். | 2023.12.31 இல் உள்ளவாறு உரிய பொறுப்புக்கள் அந்த மாவட்ட செயலகத்தினால் அமைச்சின் செலவினத்தினை உரிய பொறுப்புக்களாக உள்ளடக்கப்பட்டுள்ளது. அதனால் இந்த பொறுப்புக்கள் அமைச்சின் பொறுப்புப் பதிவேட்டில் நாளது வரையாக்கப்பட்டுள்ளது. | கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களை உறுதிப்படுத்துவதற்காக நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு பேணிச் செல்லப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிபிரமாணம் இலக்கம் 50(ii) முதல் (iv) வரையான நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் செலவின மதிப்பீடு இயலுமானவரை முழுமையாகவும் சரியாகவும் தயாரிப்பதற்கு கணக்கீட்டு உத்தியோகத்தர் கண்காணித்துகொள்ள வேண்டியிருந்த போதிலும் அமைச்சினால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்த சந்தர்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது. | | |
| (i) | 13 மீண்டெழும் செலவின விடயங்களின் கீழ் நிதியேற்பாடு செய்யப்பட்ட ரூபா 314.26 மில்லியன் மற்றும் 20 மூலதன செலவின விடயங்களின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 3,460.3 மில்லியன் நிதியேற்பாடுகளில் 40 சதவீதம் முதல் 99 சதவீதத்துக்கு இடையிலான வீச்சில் அதாவது முறையே | நிதி அமைச்சினால் விநியோகிக்கப்பட்ட மீண்டெழும் நிதியேற்பாட்டில் 6 சதவீதத்தைப் பதிவழித்தல் மற்றும் இலக்கம் 01/2023 பாதீட்டு சுற்றறிக்கையின் 07 பந்தியின் மூலம் காண்பிக்கப்பட்ட ஆலோசனைகள் மற்றும் | தேவையான நிதியேற்பாடு சரியாக எதிர்வு கூறப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 606.53 மில்லியன் மற்றும் ரூபா 2,961.75 மில்லியன் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 3,568.28 மில்லியன் சேமிக்கப்பட்டிருந்தது. | விதிக்கப்பட்டுள்ள எல்லையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வெளிநாட்டு அரசாங்கங்களின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் செலவினங்களை செய்வதற்கு ஏற்பட்டிருந்த சில மூலதன செயற்திட்டங்களின் நிதியேற்பாட்டை பயன்படுத்துவதற்கு முடியாதிருந்தமை இந்த சேமிப்புக்களுக்கு காரணமாக இருந்தது. | |
| (ii) | 05 மீண்டெழும் செலவின விடயங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டுமொத்தமான ரூபா 5,055 மில்லியன் தொகையில் ரூபா 2,476.73 மில்லியன் அதாவது 38 சதவீதம் முதல் 84 சதவீதம் வரை உயர்ந்த சதவீதத்துடன் நிதியேற்பாடு ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது. | இலக்கம் 01/2023 என்ற பாதீட்டு சுற்றறிக்கையின் 07 ஆம் பந்தியின் மூலம் காண்பிக்கப்பட்ட ஆலோசனைகள் மற்றும் விதிக்கப்பட்டுள்ள எல்லையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் இந்த சேமிப்புக்களுக்கு காரணமாக இருந்தது. | தேவையான நிதியேற்பாடு சரியாக எதிர்வு கூறப்படல் வேண்டும். |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 66 இன் மூலம் 03 செலவின விடயங்களுக்காக மாற்றப்பட்டிருந்த ரூபா 13.88 மில்லியன் ஆன மொத்த தொகையும் உரிய பணிகளுக்காக செலவிடப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தது. | எதிர்பார்க்கப்பட்ட பட்டியல்களைத் தீர்ப்பதற்காக நிதிப்பிரமாணம் 66 இன் மூலம் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்ட போதும் அந்த பட்டியல்கள் அந்த ஆண்டில் கிடைத்திருக்கவில்லை. | தேவையான நிதியேற்பாடுகள் சரியாக எதிர்வுகூறப்படல் வேண்டும். |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இரண்டு செயற்திட்டங்களினால் ஏற்படுத்தப்பட்ட ரூபா 4,672.76 ஆன பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | அந்த செயற்திட்டங்களுக்கு வருடாந்தம் ஒதுக்கப்படுகின்ற நிதியேற்பாட்டில் அந்த பட்டியல்கள் பொறுப்புக் கூற்றில் உள்ளடக்குவதற்காக போதியளவான நிதியேற்பாடு ஒதுக்கப்படாதிருந்தமையால் பொறுப்புக்களாக பொறுப்புக்கள் கூற்றில் உள்ளடக்கும் இயலுமை காணப்படாதிருந்ததை சுட்டிக்காட்டுகின்றோம். | சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சின் சகல பொறுப்புக்களும் காண்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | நகர புனர்வாழ்வு செயற்திட்டத்திற்காக மக்கள் வங்கியில் இருந்து பெறப்பட்ட கடன் தொகையை செலுத்துதலின் தாமதத்தின் அடிப்படையில் ரூபா 2 மில்லியன் தண்டப்பணம் அறவிடுவதற்கு வங்கியினால் தீர்மாணிக்கப்பட்டிருந்தது. அது அமைச்சினால் செலுத்த வேண்டிய தொகையாக இருந்தமையால் அது கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களின் கீழ் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த தொகை செலவிடப்பட்ட முறையே உறுதிப்படுத்துவதற்குரிய எழுத்து மூல சான்றுகள் 2024.05.29 ஆந் திகதி கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. | அமைச்சினால் செலுத்த வேண்டிய பணம் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களின் கீழ் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

**அவதானிப்புக்கள்**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள் | பெறுமதி ரூபா. மில். | இணங்காமைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | | | | |
| (i) VII ஆம் அத்தியாயத்தின் 12.2.1 ஆம் பந்தி | 1.32 | உள்ளபடியான பதவிகளை விட கீழ் மட்டத்தில் உள்ள பதவிகளில் பதிற்கடமைக்காக 05 உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டு அவர்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 1.32 மில்லியன் பதிற்கடமைப்படி செலுத்தப்பட்டிருந்தது. | செயற்திட்டத்திற்காக நியமிக்கப்படுதல் 1/2019 முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் ஆனமையால் அதன் நியதிகளுக்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. | தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 01/2020 என்ற வழிகாட்டி சுற்றறிக்கையின் (உ) மற்றும் (ஊ) பந்திகள் | 0.14 | வேலை நீக்கத்திற்கு உட்பட்ட மற்றும் சேவையை விட்டுச்சென்ற 02 உத்தியோகத்தர்களிடமிருந்து செலுத் வேண்டியிருந்த ரூபா 0.14 மில்லியன் கடன் மீதி 05 வருடங்கள் முதல் 10 வருடங்கள் வரையிலான காலம் கடந்திருந்த போது அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஒரு உத்தியோகத்தரின் நிலுவைக் கடன் பணத்தை செலுத்துமாறு தற்போது அறிவிக்கப்பட்டிருந்த போதும் அந்த தொகையை செலுத்துதல் வசதியீனமாக இருந்ததாக வாய்மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. | அறவிடவேண்டிய மீதிகள் வழிகாட்டியின் பிரகாரம் அறவிடப்படல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (இ) | SC&PMU/ Grant/19 என்ற 2019 யூலை 25 ஆந் திகதிய வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் சுற்றறிக்கை | ஐ.அ. டொலர் மில்லியன் 1 | இந்த நாட்டுக்கு கிடைக்கின்ற சகல வெளிநாட்டு மாணியங்கள் மற்றும் நிதி உதவிகள் திறைசேரி அங்கீகாரத்தின் அடிப்படையில் பெறவேண்டியிருந்த போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | அமெரிக்க டொலர் மில்லியன் 1.1 தொழில்நுட்ப உதவி மாணியத்திற்காக இலங்கை அரசாங்கம் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கிகு இடையே எந்தவொரு உடன்படிக்கையும் கைச்சாத்திடப்படாமையினால் தொழில்நுட்ப மாணியம் கணக்கீடு செய்வதற்காக அமைச்சுக்கு இயலுமை காணப்படாதிருந்ததை தயவுடன் சுட்டிக் காட்டுகின்றோம். | சகல வெளிநாட்டு மாணியங்களும் மற்றும் பயிலுனர் உதவி வெளிநாட்டு வள திணைக்களம் ஊடாக பெறப்படல் வேண்டும். |

## 2.4 வைப்பு மீதிகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அமைச்சின் கீழ் வைப்புக் கணக்குகள் 15 காணப்பட்டதுடன் அதில் 07 கணக்குகள் செயலிழந்த நிலையில் காணப்பட்டது. அந்த செயலிழந்த கணக்குகளை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | அந்த ஏழு கணக்குகளுக்கான கொடுக்கல் வாங்கல்கள் மிகவும் அரிதாகவே மேற்கொள்ளப்படுகின்றது. | செயலிழந்த கணக்குகளை மூடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | ரூபா 1,765.2 மில்லியன் பெறுமதியான அந்த வைப்பு மீதிகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக ஒப்பந்த பதிவேடு சமர்ப்பிக்கப்பட வில்லை. | வைப்புப் பேரேட்டின் பிரகாரம் ஒப்பந்தங்களுக்கு செலுத்த வேண்டிய வைப்புப் பணம் அதற்குரிய கோவைகளை பரீட்சிப்பதன் மூலம் உறுதிப்படுத்த முடியும். | ஒப்பந்த பதிவேடு ஒன்று பேணிச்செல்லப்படல் வேண்டும். |

**2.5 வங்கிக் கணக்கு செயற்பாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| கொழும்பு நகரம் சார்ந்த நகர அபிவிருத்தி செயற்திட்டம் (MCUDP) மற்றும் உபாய வழி நகர அபிவிருத்தி செயற்திட்டம் (SCDP) 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதும் அந்த செயற்திட்டங்களுக்குரிய வங்கிக் கணக்குகள் 2024 ஏப்ரல் 17 ஆந் திகதி வரையிலும் செயற்படு நிலையில் காணப்பட்டது. | அந்த வங்கிக் கணக்குளையும் மூடுவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | பூர்த்தி செய்யப்பட்ட செயற்திட்டங்களுக்குரிய வங்கிக்கணக்குகளை மூடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| ‘‘சியக் நகர’’ நகர உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் நகரங்களை அழகு படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அமுல்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட ரூபா 717.20 மில்லியன் பெறுமதியுடைய 08 செயற்திட்டங்களின் நிதி பற்றாக்குறையின் காரணமாக இடைநடுவில் நிறுத்தப்பட்டது. | NOR குழுவினால் அங்கீகாரம் வழங்கப்பட்ட 07 செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | உத்தேசிக்கப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளை காலரீதியில் பூர்த்தி செய்தல் வேண்டும். |

**3.2 பிரதான பணிகளுக்கு முரணான செயற்பாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) திருத்தப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் கோலுவாகொட விவசாய சுற்றாடல் பூங்கா செயற்திட்டம் 2021 ஆகஸ்ட் 21 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2023 ஆகஸ்ட் 30 ஆந் திகதி பூர்த்தி செய்யவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும் | 65 சதவீதத்தை விட மேற்பட்ட வேலை அளவு தற்போது பூர்த்தி செய்யப்பட்டமையால் வேலை பூர்த்தி செய்யாமையின் அடிப்படையில் செயற்திட்டம் கைவிடப்படுமாயின் | முறையான அங்கீகாரத்தின் அடிப்படையில் செயற்திட்டத்தை அமுலாக்கல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் இந்த செயற்திட்டத்தின் மொத்த செலவினம் ரூபா 450.56 மில்லியன் அதாவது உடன்படிக்கை செய்யப்பட்ட தொகையில் 131 சதவீதமாக இருந்ததுடன் இந்த செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகள் தேசிய திட்டமிடல் பணிப்பாளர் நாயத்தின் அங்கீகாரம் இன்றி மேற்கொள்ளப்பட்டிருந்தது. | ஏற்படுகின்ற நட்டத்தை கவணத்தில் கொண்டு இந்த நிர்மாண நடவடிக்கைகள் 2023 ஆம் ஆண்டு வரை அமுல்படுத்தப்பட்டது. | |
| (ஆ) | திறைசேரியின் பிரதி செயலாளரின் தலைமையில் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரையின் படி இந்த செயற்திட்டத்தின் விடயப்பரப்பு அகற்றப்பட்டு கடந்த காலத்தில் பூர்த்தி செய்வதற்காக காலந்தாழ்த்துவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும் முறையான அங்கீகாரம் இன்றி மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டம் 2023 ஆம் ஆண்டின் இறுதிவரையிலும் செயற்படுத்தப்பட்டிருந்தது. | வேலை பூர்த்தி செய்யாமையின் அடிப்படையில் செயற்திட்டம் கைவிடப்படுமாயின் நட்டத்தை கவனத்தில் கொண்டு இந்த நிர்மாண நடவடிக்கைகள் 2023 வரை அமுல்படுத்தப்பட்டது. | முறையான அங்கீகாரத்தின் அடிப்படையில் செயற்திட்டத்தை அமுலாக்கல் வேண்டும். |

### 3.3 எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தி மட்டம் பெறப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| யுத்தத்தினால் நிர்க்கதியானமையின் காரணமாக நலன்புரி முகாம்களில் தங்கியிருந்த நபர்களை மீண்டும் குடியமர்த்துவதற்காகவும் யுத்தத்தினால் அகதிகளான யாழ்ப்பாண மாவட்டத்தில் முகாம்களில் வாழுகின்ற 971 குடும்பங்களுக்காக வீடுகளை வழங்குவதற்காகவும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த | யுத்தம் முடிவடைந்து 14 வருடங்கள் கடந்திருந்த போதிலும் முகாம்களில் வாழுகின்ற குடும்பங்களுக்கு உரிய காணி விடுவித்தல் அவர்களுக்கு தேவையான வீடுகளை நிர்மாணித்தல் போன்றவற்றின் | மீள்குடியமர்த்தும் நடவடிக்கைகளை விரைவாக பூர்த்தி செய்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| போதிலும் யுத்தத்தினால் அகதிகளாகி 14 வருடங்கள் கடந்திருந்த போதிலும் மீண்டும் குடியமர்த்தும் நடவடிக்கைகளை முறையாக மேற்கொண்டு பூர்த்தி செய்திருக்கவில்லை. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நலன்புரி முகாம்களில் அகதிகளாக வாழ்ந்து வருவதுடன் அந்த முகாம்களின் பராமரிப்பு மற்றும் நீர்வழங்கலுக்காக நடப்பாண்டு வரை ரூபா 16.78 மில்லியன் அமைச்சினால் செலவிடப்பட்டிருந்தது. | காரணத்தை அடிப்படையாகக் கொண்டு அந்த முகாம்களை மூடுதல் தாமதமடைந்திருந்தது. | |

**3.4 எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் (Out Come) பெற்றுக்கொள்ளப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2021 யூலை 20 ஆந் திகதி வரையில் வேலை பூர்த்தி செய்யப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 295.65 மில்லியன் ஆன சந்துன்உயன நிர்மாண செயற்திட்டத்திற்காக அமைச்சினால் ரூபா 221.89 மில்லியன் செலவினம் செய்யப்பட்டிருந்தது. எனினும் அந்த பூங்காவின் நிர்மாணிக்கப்பட்டிருந்த திறந்தவெளி மேடை , எந்தவொரு பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் பயன்பாடற்றுக் காணப்பட்டது. | நபர்கள் மற்றும் நிறுவனங்களின் மூலம் கிடைக்கின்ற கோரிக்கையின் படி திறந்த வெளி மேடை வாடகை அடிப்படையில் வழங்குதல் தற்போது மேற்கொள்ளப்படுகின்றது. | திறந்தவெளி மேடை வாடகை அடிப்படையில் வழங்கி வருமானத்தை உழைப்பதற்கு கவனம் செலுத்துதல் வேண்டும். |
| (ஆ) மதிப்பீடு செய்யப்பட்ட தொகை ரூபா 19,127 மில்லியன் ஆன அறுவக்காலு சுகாதார கழிவுகள் நிறுத்தும் செயற்திட்டம் 2018 சனவரி 01 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2019 யூன் 30 திகதி வரையில் பூர்த்தி செய்வதற்கு 04 தொகுதிகளின் கீழ் அமுல்படுத்துவதற்கும் திட்டமிடப்பட்டிருந்தது. அந்த செயற்திட்டத்தில் கழிவுகளை மாற்றும் நிலையம், | 03 நிறுவனங்கள் EOI சமர்ப்பித்திருந்ததுடன் அவை மதிப்பீடு செய்யப்பட்ட பின்னர் மீண்டும் 2024.03.22 ஆந் திகதி CANC சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் உத்தேச திட்டத்தின்கான கோரிக்கை கோருவதற்காக (RFP) இதுவரையிலும் தற்போது அமைச்சரவை பத்திரம் | செயற்திட்டத்திலிருந்து எதிர்பார்த்த நலன்களை பொதுமக்களுக்கு விரைவாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

சுகாதாரமான நிலத்தை சுகாதார ரீதியில் நிலத்தை நிரப்பி நிர்மாணித்தல் மற்றும் புகையிரத வீதிகளை நீடித்தல் என்ற 03 தொகுதிகளை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் சீன கம்பனி ஒன்றுக்கு கையளிக்கப்பட்ட போதும் அந்த நிர்மாண நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்யு தொகுதியின் கீழ் புகையிரத எஞ்சின் தொகுதிகள் 04 ரூபா 8.27 மில்லியன் செலவில் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் இறக்குமதி செய்யப்பட்டு 03 வருடங்கள் கடந்திருந்ததுடன் 94 கொள்கலன் பெட்டிகள் அ.டொலர் 0.8 மில்லியன் செலவில் 2022 ஏப்ரல் 22 ஆந் திகதி இறக்குமதி செய்து களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. 34 புகையிரதப் பெட்டிகள் அ.டொலர் 2.3 மில்லியன் பெறுமதியில் இந்திய கம்பனியில் இருந்து இறக்குமதி செய்வதற்காக 2019 ஒக்டோபர் 21 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும் உரிய நிறுவனத்தால் உடன்படிக்கையின் பிரகாரம் கட்டமைப்பு ரீதியான திட்டம் நிர்மாணிக்காமையினால் உடன்படிக்கை பயனற்று காணப்பட்டமையால் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் புகையிரத பொட்டிகளை வழங்குவதற்கு மடியாதிருந்தது. எனினும் இந்த செயற்திட்டத்திற்காக 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 24,016 மில்லியன் செலவிடப்பட்டிருந்த பௌதீக செயல்முன்னேற்ற 92 சதவீதம் ஆகும். இந்த செயற்பாடுகளை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| பூர்த்தி செய்து அரச – தனியார் கூட்டுமுயற்சியின் அடிப்படையில் செயற்பாட்டு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அமைச்சினால் இதுவரை அது அமுல்படுத்தப்பட்டிருக்க வில்லை. | | |

## 3.5 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்பட்டமை

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 10 மில்லியன் ஆன கவுலுகல வாராந்த சந்தை அபிவிருத்தி செயற்திட்டம் 2022 ஏப்ரல் 17 ஆந் திகதி வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பெறப்பட்டிருந்த பௌதீக செயல்முன்னேற்றம் 40 சதவீதமாக இருந்ததுடன் 2023 ஆம் ஆண்டின் போது ரூபா 1.57 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. எனினும் இந்த செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்ததுடன் அதன் காரமாக செலவிடப்பட்ட செலவினம் பயனற்றதாக இருந்தது. | அது பொதுத்திறைசேரியினால் விநியோகிக்கப்பட்ட இலக்கம் 3/2022, 4/2022, 5/2022 என்ற சுற்றறிக்கையின் பிரகாரம் காணப்பட்ட மட்டத்தில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. | ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்களுக்கு நிதியினை வழங்கி செயல்திட்டத்தை பூர்த்தி செய்து நலனாளிகளுக்கு வழங்குதல் வேண்டும். |
| (ஆ) 2023 திசெம்பர் 15 ஆந் திகதி வேலை பூர்த்தி செய்ய வேண்டியதாக காணப்பட்ட அம்பாறை வாராந்த சந்தை அபிவிருத்தி செயற்திட்டத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 207.6 மில்லியன் ஆக இருந்ததுடன் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 40.63 மில்லியன் செலவினம் ஒன்றை செய்ய அடையப்பட்டிருந்த பௌதீக செயல் முன்னேற்றம் 52 | ஒப்பந்தகாரர் மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கிடையே சில பிரச்சனையான நிலைமைகள் எழுந்திருந்ததுடன் ஒப்பந்தகாரரால் (adjudicator) பிணக்குகள் தீர்ப்பதற்காக தற்போது நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | செயற்திட்டத்தை பூர்த்தி செய்து எதிர்பார்க்கப்பட்ட நலன்களை அடைந்து கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சதவீதம் மாத்திரம் ஆகும். 2023 ஆம் ஆண்டில் இந்த செயற்திட்டத்தில் எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் பிரதானமாக பொதுமக்களின் தேவைகளுக்காக இதுவரை மேற்கொள்ளப்பட்ட கிரயம் பயனற்ற செலவினத்திற்கு உட்பட்டிருந்தது. | | |
| (இ) | மத்திய வருமான வீடமைப்பு செயற்திட்டத்தின் கீழ் நடுத்தர வருமான நலனாளிகளின் பங்களிப்பின் அடிப்படையில் வீடுகளை நிர்மாணிக்கும் 12 செயற்திட்டங்கள் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2,939 வீட்டு அலகுகளை உடைய 09 வீடமைப்புத் திட்டங்களுக்காக 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 11,353.15 மில்லியன் செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியின் பின்னர் இந்த செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகள் செயற்படும் நிலையில் காணப்படவில்லை. | 04 செயற்திட்டங்கள் தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கை இலக்கம் 03/2022 ஆலோசனையின் பிரகாரம் நிறுத்தப்பட்டுள்ளது. 02 செயற்திட்டங்களின் வீடுகள் கொள்வனவு விலைகள் அதிகரித்துச் சென்றதன் காரணமாக வீடுகளை கொள்வனவு செய்வதற்கு கொள்வனவாளர்கள் முன்வரவில்லை. ஒரு செயற்திட்டத்தின் வேலை 2024.05.05 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. ஒரு செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் குறைபாடுகள் சரி செய்யப்படுகின்றது. | செயற்திட்டத்தை பூர்த்தி செய்து எதிர்பார்க்கப்பட்ட நலன்களை அடைந்துகொள்ள வேண்டும். |
| (ஈ) | நகர புனரமைப்பு செயற்திட்டத்தின் கீழ் குறைந்த வருமானம் பெறும் நலனாளிகளுக்கு கொலம்பகே மாவத்தையில் 615 வீடுகளை நிர்மாணிக்கும் செயற்திட்டம் ரூபா 2,546.10 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியின் அடிப்படையில் 2014 ஒக்தோபர் 30 ஆந் திகதி | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | செயற்திட்டத்தை பூர்த்தி செய்து எதிர்பார்க்கப்பட்ட நலன்களை அடைந்துகொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. எனினும் 2020 நவம்பர் 20 ஆந் திகதி வரையில் அதன் பௌதீக செயல் முன்னேற்றம் 39 சதவீதமான வேலைகள் கைவிடப்பட்டிருந்தது. அத்திகதி வரையில் கூட்டுத்தாபனத்தால் ரூபா 1,255.30 மில்லியன் அதாவது மொத்தப் பெறுமதியில் 49 சதவீதம் செலவிடப்பட்டிருந்தது. 03 வருடங்கள் முதல் அதிலிருந்து எந்தவொரு ஆக்கபூர்வமான பயன்பாடும் பெறப்படாதிருந்தமையால் மேற்கூறப்பட்ட செலவினத்திற்காக செய்யப்பட்ட ரூபா 1,255.30 மில்லியன் தொகையும் பயனற்றதாக இருந்தது. | | |

### 3.6 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | யாழ்ப்பாணம் நகர சபை கட்டிடம் மீள கட்டியெழுப்புவதற்காக ரூபா 2,142.48 மில்லியன் ஒப்பந்தப் பெறுமதியில் இன்ஜினியரிங் சேவிசஸ் தனியார் கம்பனிக்கு கையளிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டம் 2019 ஒக்தோபர் 10 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2021 ஒக்தோபர் 09 ஆந் திகதி பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும் குறித்துரைத்த கால எல்லையில் நிர்மாண நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தமையால் 2024 ஒக்தோபர் 09 ஆந் திகதி வரை 1,125 நாள் நீடித்தல் 04 நீடிப்புக்கள் வழங்கப்பட்டிருந்தன. மேலும் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அதன் பௌதீக செயல் முன்னேற்றம் 66 | RAMP தீர்மானத்தின் அடிப்படையில் இந்த செயற்திட்டம் யாழ்ப்பாண நகர சபையினால் கையேற்றல் நிராகரித்ததன் காரணமாக RAMP குழுவினால் மீண்டும் கூட்டமொன்று கூடப்பட்டிருந்தது. அதன் போது செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்காக பொருத்தமான தீர்வு ஒன்றை கவனத்தில் கொள்ளுமாறு அறறிவிக்கப்பட்டிருந்தது.<br><br>அதன் பிரகாரம் கட்டம் 1 ஆக இனங்காணப்பட்ட பகுதி மாத்திரம் பூர்த்தி | பாரிய அளவிலான செயற்திட்டங்களை மீண்டும் திட்டமிடுதல் மற்றும் வரைவு படுத்துதல் தொடர்பாக குழுவில் (RAMP) பரிந்துரை அமுல்படுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சதவீதமாக இருந்ததுடன் நிதி செயலாற்றல் ரூபா 1,636.15 மில்லியன் ஆக இருந்தது. இந்த செயற்திட்டத்தின் ஒப்பந்தப் பெறுமதி ரூபா 3,769 மில்லியன் வரை ரூபா 1,627 மில்லியனால் அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. ஒப்பந்த நிர்வாகம் மற்றும் ஆலோசனை பிரிவுகளின் தோல்வி அலகுகளின் நலிவான செயல் மேற்பார்வை இதற்குக் காரணமாக இருந்தது.<br><br>பாரியளவிலான செயற்திட்டங்களை மீண்டும் திட்டம் ஒழுங்குபடுத்துதல் மற்றும் விரைவுபடுத்துதல் (RAMP) தொடர்பாக 22/1286/604/022 மற்றும் 2022 செப்தெம்பர் 05 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானம் மூலம் வழங்கப்பட்டிருந்த கட்டளையின் படி இந்த செயற்திட்டத்தின் மிகுதி வேலைப்புகுதிகளை பூர்த்தி செய்யும் பொறுப்பு கம்பனி ஒட்டுமொத்த கட்டிடமும் யாழ்ப்பாண நகர சபைக்கு கையளிப்பதற்கு தீர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | செய்து முழுமையான செயற்திட்டமும் யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு கையளிப்பதற்கான இணங்கப்பட்டின் அடிப்படையில் கையளிப்பதற்கு திட்டமிப்பட்டிருந்தது. | |
| (ஆ) | 258 கடைகளை உடைய பாணந்துறை பொதுச்சந்தையின் கட்டிடத் தொகுதியின் நிர்மாண ஒப்பந்தம் ஆரம்ப கேள்வி தகைமை பரிசோதனையின் போது நிராகரிக்கப்பட்ட ஒப்பந்த நிறுவனத்திற்கு ரூபா 385 மில்லியன் (வட் இன்றி) 2021 செப்டெம்பர் 23 ஆந் திகதி கையளிக்கப்பட்டிருந்ததுடன் 2023 மார்ச் 24 ஆந் திகதி பூர்த்தி செய்யப்படவேண்டி இருந்தது. எனினும் அத்திகதியில் வேலை பூர்த்தி செய்யப்படாமையினால் 2024 சனவரி 15 ஆந் திகதி வரை 297 நாட்கள் நீடிப்பு | இந்த செயற்திட்டம் தற்போது உரிய வகையில் அமுல்படுத்தப்படுவதுடன் உரியவாறு ஆய்வு செய்யப்பட்ட காலநீடித்தல் கோரிக்கை அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளது. | செயற்திடங்களின் நிர்மாண நடவடிக்கைகள் செயற்பாடுகள் மற்றும் மேற்பார்வை தொடர்பில் அமைச்சு கவனம் செலுத்தி குறித்துரைத்த காலத்தில் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கப்பட்டிருந்தது. நிர்மாண நடவடிக்கைகள் உரிய சரியான மேற்பார்வை மற்றும் செயற்பாடுகள் தொடர்பில் அமைச்சின் கவனம் செலுத்தப்படாதிருந்தமையால் திருத்தப்பட்ட ஒப்பந காலத்தின் போதும் நிர்மாண நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது. | | வேண்டும். |
| (இ) | ரூபா 8,413 மில்லியன் திறைசேரி நிதியேற்பாட்டின் கீழ் குறைந்த வருமானம் பெறம் குடும்பங்களுக்காக 14,022 வீடமைப்பு வீட்டு அலகுகள் “ஒபட்ட கெயக் றட்டட ஹெட்டக் செயற்திட்டம்” இன் கீழ் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகள் 2022 திசெம்பர் வரையிலும் பூர்த்தி செய்ய வேண்டியிருந்த போதிலும் ரூபா 7,704.95 மில்லியன் செலவில் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 79 சதவீத செயல் முன்னேற்றம் அதாவது 7,744 வீட்டு அலகுகள் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் 75 வீட்டு அலகுகளின் நிர்மாணங்கள் கைவிடப்பட்டிருந்தது. | திறைசேரியிலிருந்து உரிய பிரகாரம் நிதியேற்பாடு கிடைக்காமையின் அடிப்படையில் குறித்த வருடத்தில் பூர்த்தி செய்து வீடுகள் பூர்த்தி செய்யப்படவேண்டிய வீடுகளின் எண்ணிக்கை பூர்த்தி செய்யமுடியாதிருந்தது. | திட்டமிடப்பட்ட பிரகாரம் காலரீதியில் செயற் திட்டங்களை பூர்த்தி செய்தல் வேண்டும். |
| (ஈ) | 2023 ஆம் ஆண்டின் போது 500 வீட்டு அலகுகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 375 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அதன் பௌதீக செயல் முன்னேற்றம் 5 சதவீதமான மிகவும் குறைந்த சதவீதத்தைக் கொண்டிருந்தது. அதன் பிரகாரம் மேற்கூறப்பட்ட வீட்டுத்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நலனாளிகள் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்காக கிடைத்திருக்கவில்லை. | ரூபா 750,000 ஆன தொகையில் காணப்படுகின்ற கிரயத்தின் அடிப்படையில் வீடு ஒன்றை நிர்மாணிக்க முடியாமையின் அடிப்படையில் இந்த நிகழ்ச்சித்திட்டம் நலனாளிகளுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. அதனால் தேவையான நலனாளிகளின் எண்ணிக்கையை இனங்காண முடியாதிருந்தது. | சரியான ஆய்வு ஒன்றை மேற்கொண்ட பின்னர் மாத்திரம் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | வீடமைப்பு மற்றும் நிர்மாணப் பிரிவின் மூலம் சியபத்த மரந்த கஹமுல்ல இல் 40 வீட்டு அலகுகளை நிர்மாணிக்கும் செயற்திட்டம் மற்றும் கட்டாண பொலிஸ் பயிற்சி கல்லூரியின் விடுதியை நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்காக முறையே 110.66 மில்லியன் மற்றும் ரூபா 132.8 மில்லியன் செலவில் பெறப்பட்டிருந்த பௌதீக செயல்முன்னேற்றம் முறையே 35 சதவீதம் மற்றும் 31 சதவீதம் மாத்திரம் ஆகும். 2023 ஆம் ஆண்டின் போது இந்த செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் கைவிடப்பட்டமையால் அமைச்சினால் இதுவரை செலவிடப்பட்ட ரூபா 243.46 மில்லியன் செலவினம் பயனற்ற செலவினத்திற்கு உட்பட்டிருந்தது. | மறந்தகஹமூல வீடமைப்பு திட்டத்தின் நிர்மாணிக்கும் போது வீடுகளின் நிர்மாணக் கிரயம் அதிகரித்திருந்ததுடன் அதன் பிரகாரம் வீடுகளின் விற்பனை விலையைத் திருத்துவதற்கும் மாடிகளின் எண்ணிக்கையை 04 வரை குறைப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டிருந்தது. | செயற்திட்டத்தை விரைவாக பூர்த்தி செய்து எதிர்பார்க்கப்பட்ட நலன்களை அடைந்து கொள்ளல் வேண்டும். |
| (ஊ) | நூறு நகர நகர உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் நகர அபிவிருத்தி நிகழ்சித் திட்டத்தில் 2023 சனவரி 01 ஆந் திகதி வரையில் வேலை பூர்த்தி செய்யப்பட்ட 130 செயற் திட்டங்களுக்காக 2023 இன் வருடாந்த நிதியேற்பாட்டின் மூலம் ரூபா 11,105.86 மில்லியன் செலவினம் செய்யப்பட்டிருந்தது. அந்த செயற்திட்டங்களுக்கிடையே 53 செயற்திட்டங்களின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்ததுடன் அதுவரையில் உத்தரவாத காலத்தையும் மிஞ்சியிருந்த போதிலும் உரிய நிறுவனத்திற்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலே செயற்திட்டங்களில் 110 செயற்திட்டங்களுக்காக மேலும் ரூபா 1,240.09 மில்லியன் செலுத்த வேண்டியிருந்தது. | செயற்திட்டங்களை திட்டமிடும் போது காணப்பட்ட பொறியியலாளர் மதிப்பீட்டினை விட விலை அதிகரித்தமை ஒப்பந்தம் கையளிக்கும் போது ஏற்பட்டமையால் செயற்திட்டங்களின் விலைகள் மாற்ற வேண்டி ஏற்பட்டிருந்தது. | செயற்திட்டங்களின் வேலை பூர்த்தி செய்து நலனாளிகளுக்கு விரைவாக கையளித்தல் வேண்டும். |

அவ்வாறே TEC பெறுமதியுடன் ரூபா 113.76 மில்லியன் செலுத்தப்பட்ட 14 செயற்திட்டங்களும் காணப்பட்டது.

## 3.7 நிதி விடுவிக்கபட்டிருந்த போதும் செயல் முன்னேற்றத்தைப் பெறாதிருந்த செயற்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நூறு நகர அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 621.62 மில்லியன் ஆன 05 அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சினால் ரூபா 71.24 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் எந்தவொரு பௌதீக செயல் முன்னேற்றத்தையும் அடைந்து கொள்வதற்கு முடியாமை சர்ச்சைக்குரிய விடயமாக இருந்தது. | இந்த செயற்திட்டத்திற்காக கடந்த காலங்களில் காணப்பட்ட கொவிட் தொற்று நோய் மற்றும் மூலப்பொருள் பற்றாக்குறை மற்றும் ஏனைய விலைகள் எதிர்பார்க்காத வகையில் அதிகரித்துச் சென்றமை போன்ற விடயங்கள் தாக்கமளித்திருந்தது. | செயற்திட்டங்களை காலரீதியில் பூர்த்தி செய்து எதிர்பார்க்கப்பட்ட நலன்களை அடைந்துகொள்ளல் வேண்டும். |

## 3.8 உள்நாட்டு நிதியங்களில் அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) செயற்திட்டத்தின் சொத்துக்கள், உபகரணங்களின் குறைப் பயன்பாடு / விளைவற்றுக் காணப்பட்டமை. | | |
| (i) 2019 செப்தெம்பர் 30 ஆந் திகதி வேலை பூர்த்தி செய்யப்பட்ட பெறுமதி ரூபா 370 மில்லியன் ஆக இருந்ததுடன் மஹர நிருவாகம் மற்றும் வணிக கட்டிடத் தொகுதியில் முன்பக்கத்தில் கடைகள் மற்றும் சகல வசதிகளையும் உடைய உணவகம் என்பன 05 வருட காலம் அளவில் பயனற்றுக் காணப்பட்டது. மின்பாரந்தூக்கி | மஹர பிரதேசத்தில் முன்னாள் காணப்பட்ட குறைபாடுகள் உடனான அரச நிறுவனம் மற்றும் பொது நடவடிக்கைகளுக்காக முறையான இடமொன்று காணப்படாமையின் குறைபாட்டை மாற்றியமைப்பதற்கு முன்னால் பிரதேச சபைக்குச் சொந்தமான | கட்டிட நிர்மாணத்தின் குறைபாடுகளை சரி செய்து அதனை ஆக்க பூர்வமாக பயன்படுத்தி அரசாங்கத்திற்கு சாதகமான பிரகாரம் வருமானத்தை உழைப்பதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | இயந்திரங்கள் இரண்டும் மற்றும் சகல வசதிகளுடனும் கூடிய 428 இருக்கைகளை உடைய கேட்போர் கூடத்தின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட திகதியிலிருந்து எந்தவொரு பயன்பாட்டிற்கும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. கட்டிடத்தில் மின் எதிர்ப்பு இலத்திரனியல் பிரிவு எந்தவொரு தரப்பினரால் கழட்டி எடுத்துச் செல்லப்பட்டிருந்தது .2023 யூன் 06 ஆந் திகதி ஒப்பந்தத்தின் நிறுத்தி வைத்தல் பணம் இதுவரை செயற்திட்டத்திற்காக செலுத்த வேண்டிய பட்டியல் மற்றும் நிறுத்தி வைக்கப்பட்ட பணத்தில் ஈடுசெய்யப்பட்டிருந்தது. இந்த கட்டிடத்தை பயன்பாட்டிற்கு எடுக்காமல் விளைவற்றுக் காணப்பட்டமை அரச நிதி செயற்திறனின்மையாக பயன்படுத்தப்படுவதுடன் இது தொடர்பாக அமைச்சினால் இதுவரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கட்டிடத்தில் காணப்பட்ட நிலையத்தில் பல்நோக்கு கட்டிடம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு முன்மொழியப்பட்டிருந்தது. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | பெலியத்த அம்பிட்டிய குளத்தில் நடைபாதை நிரல் ஒன்றை நிர்மாணித்தல் மற்றும் நிலக்கீழ் அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம் ரூபா 65.77 மில்லியன் வேலை பெறுமதியின் அடிப்படையில் 2022 ஆகஸ்ட் 30 ஆந் திகதி வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. செயற்திட்டம் பூர்த்தி செய்து வெலியத்த பிரதேச சபைக்கு கையளிக்க வேண்டியிருந்த போதிலும் நுழைவு வீதியில் காடு வளர்ந்திருந்தமை, நடமாடும் நிரலில் முழுவதும் நடமாடுவதற்கு வசதியீனமாக சேற்றுடன் உள்ள நிலைமை காணப்பட்டமை, குளத்தைச் சுற்றி நிர்மாணிக்கப்பட்ட மதகு | முன்னாள் இருந்த தலைவரால் பல்வேறு குறைபாடுகளை காண்பித்து செயற்திட்டத்தை கையேற்றல் புறக்கணிக்கப்பட்டிருந்தது. எனினும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைமை 2024 மே மாதம் 03 ஆந் திகதி களப்பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்பட்டது. அதன் போது இனங்காணப்பட்ட சிறிய பிரச்சனையான நிலைமை தீர்ப்பதற்கு உரிய தரப்பினர் இணக்கம் தெரிவித்திருந்தனர். அந்த | காணப்படுகின்ற பிரச்சனைகளை விரைவாக தீர்த்து நிர்மாணங்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்துதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| முறைமையில் நலிவாகக் காணப்பட்டமை குளத்தில் நீர் வழிந்தோடும் நலிவான நிலை காணப்பட்டமை தனியார் காணிகளில் நீர் தேங்கி நின்றமை போன்ற நலிவுகள் காணப்பட்டமையால் பிரதேச சபையினால் இந்த செயற்திட்டத்தை கையேற்றல் நிராகரிக்கப்பட்டிருந்தது. அதனால் மேற்கூறப்பட்ட செயற்திட்டம் எந்தவொரு ஆக்கபூர்வமான பயன்பாட்டுக்கும் எடுக்கப்படாமல் 02 வருடங்கள் அளவில் விளைவற்றுக் காணப்பட்டதன் காரணமாக இதற்காக செலவிடப்பட்ட ரூபா 65.77 மில்லியன் தொகையும் பயனற்ற செலவினத்திற்கு உட்பட்டிருந்தது. | பிரச்சனை தீர்த்தவுடன் வெலியத்த பிரதேச சபையின் தற்போதைய முகாமைத்துவ செயற்திட்ட பொறுப்பேற்பதற்கு விருப்பம் தெரிவிக்கப்பட்டுள்ளது. | |

### 3.9 பெறுகைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.3.1 இன் பிரகாரம் சகல அது சார்ந்த செலவினங்களை உள்ளடக்கிய கிரய மதிப்பீடு 2.3.1 (அ) இன் பிரகாரம் ஆரம்ப சுற்றாடல் பரிசோதனை, சுற்றாடல் தாக்கம் தொடர்பான மதிப்பீடு, சமூகத் தாக்கங்கள் தொடர்பான மதிப்பீடு பெறுகை நிறுவனத்தால் மேற்கொள்ள வேண்டியிருந்த போதும் ஒப்பந்தப் பெறுமதி ரூபா 120.7 மில்லியன் ஆன கோலுவாகொட விவசாய சுற்றாடல் பூங்கா செயற்திட்டம் மற்றும் ஒப்பந்தப் பெறுமதி ரூபா 795.5 மில்லியன் ஆன பொரலஸ்கமுவ பல்நோக்கு கட்டிட நிர்மாணத்திற்காக அந்த அறிக்கை தயாரித்து அங்கீகாரம் பெறப்பட்டிருக்க வில்லை. | சகல பெறுகை நடவடிக்கைகளும் முன்னால் மாநகர சபை மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் மூலம் மேற்கொள்ளப் படுகின்றது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ரூபா 445 மில்லியன் பாதீட்டு மதிப்பீட்டின் நிதியேற்பாட்டின் அடிப்படையில் மகர நிர்வாக மற்றும் வணிக கட்டிடத்தொகுதி நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதும் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.3.1 (அ) இன் பிரகாரம் இந்த கட்டிடத்தின் நிர்மாண நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் ஆரம்ப சாத்தியள ஆய்வு மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் 4.3.1 இன் பிரகாரம் சகல சார்ந்த செலவினங்களையும் உள்ளடக்கி மொத்தக்கிரய மதிப்பீடு ஒன்று பெறுகை நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | ஆரம்ப சந்தர்ப்பத்தில் ரூபா 455 மில்லியன் மொத்த செலவினத்தின் அடிப்படையில் செலவினம் கணிப்பிடப்பட்டு அங்கீகாரத்தை பெற்றுக்கொண்ட பின்னர் பெறுகைகள் கிடைக்கின்ற முறையின் பிரகாரம் திட்டத்தின் பகுதிகளை பூர்த்தி செய்வதற்கான கட்டணமாக விரிவான அளவிடைப்பத்திரம் தயாரிக்கப்பட்டுள்ளது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.10 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 திசெம்பர் 21 ஆந் திகதிய இலக்கம் 02/2017 என்ற சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 2(i) பந்தியின் பிரகாரம் பதிவு உரித்து இன்றி பயன்படுத்தப்படுகின்ற வாகனம், தமது நிறுவனத்தின் பெயரில் பதிவு செய்வது தொடர்பிலும் அல்லது பதிவின் உரித்து உரிமையான நிறுவனத்திற்கு முறையாக கையளிக்கும் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும் சட்ட ரீதியான உரித்து அமைச்சிற்கு சொந்தமில்லாத ரூபா 414.81 மில்லியன் பெறுமதியான 31 வாகனங்கள் அமைச்சினால் பயன்படுத்தப்படுகின்றது. | அந்த வாகனங்களின் உரித்தினை கையேற்பதில் பிரச்சனைகள் காணப்படுகின்றமையால் சட்ட ரீதியான உரித்து கையேற்பதற்கு தாமதமடைந்துள்ளது. | சுற்றறிக்கையின் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) நூறு நகர அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அமைச்சு நிதியேற்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 8,845 மில்லியன் பெறுமதியான 29 செயற்திட்டங்கள் சட்ட ரீதியாக உரிய நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அந்த சொத்துக்கள் எந்தவொரு நிறுவனத்தினதும் கணக்கு கூற்றுக்களில் உள்ளடக்காமையின் காரணமாக இந்த சொத்துக்களை கணக்குகளில் இருந்து கைவிடுவதற்கான இயலுமை காணப்பட்டது. | இந்த செயற்திட்டங்களை அமுல்படுத்துகின்ற சந்தர்ப்பத்தில் உரிய நிறுவனம் கையேற்பதற்கு இணக்கம் தெரிவித்த போதும் நிர்மாணத்தை பூர்த்தி செய்த பின்னர் ஏதாவது பிரச்சனைகள் சமர்ப்பிக்கப்படுகினறமையால் அந்த செயற்திட்டத்தை கையேற்பதும் தாமதமடைந்திருந்தது. | சொத்துக்கள் சட்ட ரீதியாக கையளிக்கப்படல் வேண்டும். |

## 3.11 சிக்கனமற்ற கொடுக்ககல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) வெலியத்த அம்பிட்டிய குளத்தில் நடமாடும் நடைபாதையொன்றை நிர்மாணித்தல் மற்றும் நிலப்பரப்பை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம் ரூபா 79.56 மில்லியன் பெறுமதியின் அடிப்படையில் நிர்மாணத்திற்காக காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த கூட்டுத்தாபனத்தால் எந்தவொரு அங்கீகாரமும் இன்றி இந்த ஒப்பந்தம் ரூபா 10.15 மில்லியன் இலாபம் வைக்கப்பட்டு ரூபா 69.41 மில்லியன் வேலை பெறுமதியில் அடிப்படையில் வ/ப நிலமீட்டல் மற்றும் அபிவிருத்திக் கம்பனிக்கு உப உப வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | உப ஒப்பந்தங்களை வழங்குவதற்கு முறையான அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) ஹோலுவாகொட விவசாய சுற்றாடல் பூங்கா செயற்திட்டம் காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திற்கு நேர் ஒப்பந்த முறையின் கீழ் வழங்கப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்தகாரரால் மேலதிக இலாபம் பெறும் வகையில் இலாப எல்லை வைத்து உப ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்ததுடன் அதன் மூலம் காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனம் ரூபா 13.36 மில்லியன் இலாபத்தை ஈட்டியிருந்தது. | அந்த அமைச்சு நிலையான தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழுவின் செயற்பாடுகளுக்காக 2021.01.22 ஆம் திகதிய அமைச்சு செயலாளரின் முன்னுரிமை குழுவில் இருந்து எடுக்கப்பட்ட தீர்மானம் ஆகும். | நேர் ஒப்பந்த முறையின் கீழ் ஒப்பந்தம் வழங்கிய ஒப்பந்தகாரருக்கு மேலதிக இலாபம் உழைப்பதற்கான சந்தர்பம் வழங்காதிருத்தல் வேண்டும். |

## 3.12 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்காமை

| கணக்காய்வு ஐயவினாக்கள் தொடர்பான விபரம் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(17)(உ) மற்றும் 42 ஆம் பிரிவு மற்றும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் 155 மற்றும் 2012 ஏப்ரல் 09 ஆந் திகதிய PSMD/AD/2/1/1/26 ஆம் இலக்க சனாதிபதி செயலாளரால் விநியோகிக்கப்பட்ட கடிதத்தில் (ஆ) பந்தியின் பிரகாரம் கணக்காய்வு ஐயவினாக்களுக்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்து அவற்றுக்கு முழுமையான பதிலளித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தினரதும் கணக்கீட்டு உத்தியோகத்தினரது பொறுப்பாக இருந்த போதும் 2023 ஆம் ஆண்டுக்குரியதாக விநியோகிக்கப்பட்ட 17 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது பதில் அளிக்க வேண்டிய கணக்காய்வு ஐயவினாக்களுக்காக தாமதமின்றி பதிலளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | கணக்காய்வு அதிகார சட்டத்தின் ஏற்பாடுகள், நிதிப்பிரமாணம் மற்றும் சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைதல்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2030 வரையில் சகலருக்கும் போதியளவான பாதுகாப்பு மற்றும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளக்கூடிய வீடுகள் மற்றும் அடிப்படை சேவைகளுக்கான நுழைவை உறுதிப்படுத்துதல் மற்றும் பழைய வீடுகளை அபிவிருத்தி செய்யும் நிலைபேறான அபிவிருத்தி நோக்கமாக இனங்காணப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது 49 சதவீதத்திற்கும் குறைவான செயல் முன்னேற்றம் அடையப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் அடைந்து கொள்வதற்கு முறையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 5. மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் மீள் குடியேற்றப் பிரிவில் சேவையாற்றுகின்ற 48 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 05 மாவட்ட செயலகங்கள் மற்றும் 24 பிரதேச செயலகங்களுக்கு நியமிக்கப்பட்டிருந்த போதிலும் அவர்களின் செயலாற்றல் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டிருக்க வில்லை. | வடக்கு கிழக்கு மாவட்ட செயலகங்களில் கடமைகளில் ஈடுபட்ட உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்ட சம்பள பத்திரம் யாவும் உரிய உத்தியோகத்தரினால் கையொப்பமிடப்பட்டுள்ள துடன் அந்த தகவல்கள் 2024.05.27 ஆந் திகதி கணக்காய்வுக்கு வழங்கப்பட்டுள்ளது. | மாவட்ட செயலகங்களுக்கு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் செயலாற்றலை மதிப்பீட்டுக்கு உட்படுத்துதல் வேண்டும். |